★ கல்வித்துறையின் தூண்கள் கல்லூரிகளே!

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 15 இதழ் 177
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 31-7-1994

'செண்றலுக்கு' தலைவர் ஆகி

(யாழ்ப்பாணம்)

நீண்டதொரு வரலாற்றையுடைய நிலையான கல்விப் பாரம்பரியத்தையுடைய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தனது 175 வது ஆண்டு நிறைவுவிழாவைக் கொண்டாடுவதையிட்டு நாம் மகிழ்ச்சி அடைகிறோம்.

இவ்வாறு யாழ் மத்திய கல்லூரியின் 175 வது ஆண்டு நிறைவையொட்டி தேர்வுத் தலைவர் திரு. வே. பிரபாகரன் விடுத்த ஆசிச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார். வாச்செய்தியில் மேலும் குறிப்பிடுகையில்:

அந்நாள் வேளாண் திலிருந்தே தமிழ் மண்ணிக் அறிவு விளக்கு ஏற்றி வைத்த தமிழரின் தேசிய விழிப்பிற்கு வெளிச்சம் பாய்ச்சியவரும் வழிகாட்டியவரும் கல்விக் கூடங்களில் ஒன்றாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முக்கிய இடத்தை வகிக்

(4-ம் பக்கம் பார்க்க)

ஆப்கான் தலைநகரில் வி.வி.ஸி. நிருபர் கொலை

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் பி. பி. ஸி. நிருபர் ஒருவர் ஆயுதபாணிகளால் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

காபூலிலுள்ள தெற்கே பிர நகர் ஒன்றின் ஹெல்மந்த் மாகாண தலைநகரிலிருந்து நிருபர் கொண்டு வரப்பட்டு ஆயுதபாணிகளால் கடத்தப்பட்டார்.

(4-ம் பக்கம் பார்க்க)

77 கலவரம் போன்று
மீண்டும் ஒரு கலவரம் ஏற்படும்
என மக்கள் மத்தியில் அச்சம்

'ராவய' ஆசிரியர் 'கூறுகிறார்

(கொழும்பு)

தேர்தலுக்குப்பின்பு, 1977-ம் ஆண்டு இடம்பெற்ற கலவரம்போன்று ஒரு கலவரம் வெடிக்கலாம் என்று மக்கள் மத்தியில் ஒரு பதட்டநிலை ஏற்பட்டு வருகின்றது என்று 'ராவய' ஆசிரியர் விக்டர் ஐவன் பிபிஸி சந்தேசியவுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்

பேட்டியில் அவர் மேலும் கூறுகையில்:

அமைதியான தேர்தல் இடம்பெற்றாலும் சம்பவங்கள் இவ்வாறானதொரு நிலை ஏற்படலாம் என்பதை எடுத்துக்காட்டுகிறது. இதற்குரிய சம்பவங்களைக்கூடக் கூறலாம்:

பிலியந்தலைப் பொலிஸ் நிலையத்திலுள்ள வெஞ்சினை அறையில் இருந்த ஆயுதங்களை

(கொழும்பு)

கொழும்பு வாழ் தமிழ் மக்

கலைச்சாமினி பொலிஸே கத்தரவைச் செய்யப்படுத்தாத விடயம்ஒப்படைக்குமாறு விடுத்

(4-ம் பக்கம் பார்க்க)

அரசாங்க துஷ்பிரயோகம்
பொ.ச.மு. கண்காணிக்கும்!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியினர் தேர்தல் நடவடிக்கைகளை அரசாங்க வாகனங்களையும், வளங்களையும் பாவிப்பதை கண்காணிக்கும் பொருட்டு பொதுசன ஐக்கிய முன்னணியினர் விசேட ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

இதற்கென பொதுமக்களை கொண்ட கண்காணிப்பு குழுக்களை ஒவ்வொரு மாவட்டங்களிலும் ஏற்படுத்தி அரசு மத்திய விபரங்களை திரட்டியுள்ளன்றனர்.

இது குறித்து பொதுசன ஐக்கிய முன்னணியினர் தேர்தல் ஆணையாளருக்கு பல புகார்களை தெரிவித்துள்ளனர் இதுவரையிலும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இதையடுத்து பொதுமக்களை கொண்ட கண்காணிப்பு குழுக்களை அமைத்துள்ளனர்.

ம-மி

கொழும்புத் தமிழர்களுக்கு குண்டர் படைகள் மிரட்டல்

(கொழும்பு)

கொழும்பு வாழ் தமிழ் மக் அச்சுறுத்தல்களும் மிரட்டல்களும் அதிகரித்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. கொழும்பில் இம்முறை

கடந்த குண்டர் படைகளின் அச்சுறுத்தல்களும் மிரட்டல்களும் அதிகரித்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. கொழும்பில் இம்முறை தமிழ் மக்களின் சில இடங்களை பெறக்கூடிய வாய்ப்பு கண் தென்படுவதால் கொழும்புத் தமிழர்கள் மீது குண்டர்

(4-ம் பக்கம் பார்க்க)

குண்டு வெடிப்பில் 3 பொலிஸார் காயம்

(வவுனியா)

வவுனியாவில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் மூன்று பொலிசார் உட்பட ஐவர் காயமடைந்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை இரவு வவுனியா ரயில் நிலையத்திற்கு அருகே இக்குண்டு வெடிப்பு இடம்பெற்றது இதனால் அங்கு வரவேற்பு மண்டபத்தில் ஈடுபட்டிருந்த மூன்று பொலிசாரும் இரு பொதுமக்களும் காயமடைந்தனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

வடக்கிலிருந்து படையினர் தெற்கே விரைவு

(கொழும்பு)

தெற்கில் அதிகரித்துவரும் தேர்தல்வன்முறைகளை அடுத்து வடக்கிலிருந்து குறிப்பிட்ட அளவு படையினர் தெற்கே அனுப்பப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தெற்கில் நாளுக்குநாள் தேர்தல் வன்முறை அதிகரித்துவருவதால் தெற்கில்

(4ம் பக்கம் பார்க்க)

தீவுப் பகுதியிலிருந்து கடும் ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

தீவுப் பகுதி பகுதி முகாம்களிலிருந்து நேற்றுக் காலையும் இரவும் கடும் ஷெல் தாக்குதல்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன.

மண்டைதீவு, அராலித்துறை காரைநகர் கடற்கரையிலிருந்தே ஷெல் தாக்குதலும் கரையிலிருந்தும் இப்பகுதிக்குடும் நடாத்தப்பட்டன.

(4-ம் பக்கம் பார்க்க)

சிருடை கிழித்தெறியப்பட்டு கான்ஸ்டபிள் மீது தாக்குதல்
அமைச்சர் கூட்டத்தில் சம்பவம்

(கொழும்பு)

நீர்கொழும்பில் அமைச்சர் ஜோசப் அரசுதாஸ் கலந்து கொண்ட பிரசாரக் கூட்டமொன்றில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கடுமையாகத் தாக்கப்பட்டு அவரது சிருடையும் கிழித்தெறியப்பட்டுள்ளது.

பொலிசாரின் அனுமதியின்றி நடாத்தப்பட்ட இக் கூட்டம் தொடர்பாக விசாரிக்கச் சென்ற கான்ஸ்டபிளே

(4ம் பக்கம் பார்க்க)

சந்திரிகாவை இழிவுபடுத்தும் பிரசுரங்கள் அச்சடிப்பு

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணி பிரதித் தலைவர் சந்திரிகா குமாரணதுங்காவை இழிவுபடுத்தும் வகையில் அச்சிடப்பட்ட சுவரொட்டி 'அந்த' சந்திரிகாவை பொலிசாரால் கொழும்பில் வைபற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'அந்த' சந்திரிகா விதர

(4-ம் பக்கம் பார்க்க)

அரச அதிகாரிகளுக்கு பேராசிரியர் பீரிஸ் எச்சரிக்கை

(கொழும்பு)

அமைச்சர்களின் உத்தரவுகளுக்கு ஐக்கியதேசியக் கட்சிக்கு ஆதரவாக செயற்படும் அரச அதிகாரிகளை தேர்தலுக்கு பின்பு பாரதூரமான விளைவுகளை சந்திக்கவேண்டி வருமென பொதுசன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களின் உத்தரவுகளுக்கிணங்க அரச

(4-ம் பக்கம் பார்க்க)

பொ.ச.மு. ஆதரவாளர் கொலை
அமைச்சர் நேரடித் தொடர்பு?

(அனுராதபுரம்)

அனுராதபுரத்தில் நேற்று முன்தினம் மேலும் ஒரு தேர்தல் கொலை இடம்பெற்றுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களினால் பொதுசன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த பிரசேனவின் எப்பாவல கிராம முதலாம் குறுக்கு வீதியை மரண மாகியுள்ளார். இவர் இரு பிள்ளைகளின் தந்தையாவார்.

பிரசேனவின் கொலையும் அமைச்சர் ஒருவருடனும் நேரடியான தொடர்பிருப்பதாகவும் கொலையுண்டவர் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் இரத

(4-ம் பக்கம் பார்க்க)

வகுப்பு விளம்பரம்

O/L Maths 94

நிச்சயம் Credit Distinction பெறு வேறடைய (விடுதலைவிளம்பு) ஆண்டு 9, 10 உயர்பட்ட வினா-விடை மூலமும் B.Sc. ஆசிரியர் கதிர்காமநாதன் 85, கொக்குவில், திருநெல்வேலி. (இ-1153)

ஸ்ரீகா வாச் அன் ரேடியோ சேல்ஸ்

சலவிதமான மணிக்கூடுகள், ரேடியோக்கள் உதிரி பாகங்களுடன் திருத்தி கொடுக்க ஒரே வாச் அன்ட் ரேடியோ சேல்ஸ், மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை, கொடிகாமம், சாவகச்சேரி; தங்கமயில்: 884 அச்சுவேலி வீதி, (வாணவிழா - கல்லூரி அருகில்) யாழ்ப்பாணம். (ஏ-4183)

பயிற்சி வினாத்தாள்கள்

3, 4, 5, 6, 7, 8, 9, 10, O/L வகுப்புவரையிலான அனைத்துப் பாடங்களுக்கும் மாதாந்த பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன் ஒவ்வொரு மாதமும் எம்மால் வெளியிடப்படுகின்றன. எல்லா பிரதான புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். BOND, யாழ்ப்பாணம். (இ-1155)

புலமைப் பரிசில் 1994

Bond கல்வி நிறுவனத்தால் 31-07-94, 02-08-94, 04-08-94 திகதிகளில் வெளியிடப்படும் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரிப் பயிற்சி வினாத்தாள்கள் (கணிதம், தமிழ்) விடைகளுடன் 10/-மட்டும். எல்லாப் பிரதான புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (இ 1156)

மணிக்கூடுகள் தேவை

சலவிதமான தரமுள்ள மணிக்கூடுகள், நல்ல நிலையில் வாங்கப்படும். கலை வாச் சேல்ஸ் உரிமையாளர்: தம்பு தேவதாஸன், 113 கோவில் அம்மன் கோவில் முதியாக, கல்லுண்டாய் ரோட், யாழ்ப்பாணம். (இ-1160)

ஜோதிட விஞ்ஞானம்

புரோனவ், நெஸ்டியூனுடன் வியாழ, ராகுடனுமிணைவு புவ்வியே சஞ்சரிக்கையில் தேர்தல் வன்முறைகளும் U N. P. தோல்வியாரி அரசைக்கொல்லையும், வரலாறு கண்டாகும். சத்தியம் கூடுமை. (இ-1161)

(O/L) கணிதம்

Distinction பெறுபேறடைவதற்கு 27 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் சகல Section களும் Potion களும் நிறைவேற்றப்படும் Section & Potion Rivison உடன் Past Papers Practice மூலம் கற்பிக்கப்படும் ஆறுமுகராஜன், 10, கல்சேல் கிறக்கு ஒழுங்கை, வேலாயுதர் வீதி, சுன்டிக்குளி (இ-1158)

தேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

மதுவரி சார்பாகவுள்ள தேர்முகப்பரீட்சை ஆகஸ்ட் மாதம் 26ம் திகதி நடைபெறும் என மதுவரி ஆணையாளர் உபின்யூ எம்; எம். சத்திரசேகர அறிவித்துள்ளார். பரீட்சார்த்திகளை அக்கறை கொண்ட தபாலூடாக தேர்முகப்பரீட்சைக்கு செல்லுமாறும் ஆணையாளர் அறிவித்துள்ளார். -162

இன்று

(கண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்திலுள்ள வடக்கு மாகாணசபை தேர்தல் தொகுதியில் கண்டமிடம் குழுக் கூட்டம் இன்று மாலை 3மணிக்கு ஆனைப்பந்தி விநாயகர் கோவிலடியிலுள்ள சென். மேரிஸ் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. 78-இ—

0 0 0

(உடுவில்)

வித்தியாசாலை வீதியிலுள்ள ஸ்ரீ விசாலாக்கி அம்பிகை சமேத விஸ்வநாத சுவாமி கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று 31-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி பத்து நாட்கள் நடைபெறும். —109

0 0 0

(கொழும்புத்துறை)

தொண்புரம் வடக்கு இலங்கை சமிதி முருகன்கோவில் நாளாந்த வெளிவீதியுலா மாலை மாட்டாரதி வருடாந்தகிரியாகடுக் கோலாகலம் இன்று 31ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 1-00 மணிக்கு நிலையமுற்றவிக் தலைவர் மு. சடாக்சரம் தலைமையில் நடைபெறும். -154

0 0 0

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

கணிதவியலிலும் புள்ளிவிபரவியலிலும் உதவி விரிவுரையாளர் பதவிக்கான 1994 ஜூன் 2 ஆம் தேதிய விளம்பரத்திற்கு மேலதிகமாக,

இப்பதவிக்கான விண்ணப்ப முடிவு தேதி 1994 ஆகஸ்ட் 31ஆம் தேதிவரை நீடிக்கப்படுகிறது;

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி. யாழ்ப்பாணம். 1994 - 07 - 27

(ஏ-4247)

POSTGRADUATE DIPLOMA IN PUBLIC ADMINISTRATION

Applications are invited for the above course from graduate of a recognized University. Students awaiting result also can apply. The course is fee levying. Age preferably under 45.

Applicants should have adequate proficiency in English to follow the course.

This is one year Full-Time course. Candidates should sit an aptitude test / oral in English medium.

Prospectus & Application forms can be obtained from the Senior Assistant Registrar/Academic, University of Jaffna, on payment of Rs 50/- at the Finance Branch:

Please forward the duly perfeeted application to the SeniorAsstRegistrar/Academic University of Jaffna on or before 1994 - 08 - 21.

REGISTRAR.

1994 - 07 - 28

(A - 4240)

(கல்லாவில்)

தெற்கன்சேனை ஸ்ரீஞான வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று 31ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்களுக்கு நடைபெறவுள்ளது நிகழ் பூசை ஆராதனை எழிலாடுகளும் மாலையில் தெப்பம் தொடர் சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளது. -59

0 0 0

(கொழும்புத்துறை)

கல்லாம் வந்தரோடை ஸ்ரீ விசாலாக்கி விஸ்வநாதர் ஆலயத்தில் வருடாந்த உற்சவம், இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி 10 தினங்கள் தொடர்ந்து நடைபெறும். -154

0 0 0

(வேலணை)

இலவசப் பேரூந்து விநியோக சபையில் நிறுவி இலவச சேவை, இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 4-00மணிக்கு நடக்க ஆதீனத்தில் குருமணி சோமசுந்தர பிரமாச்சாரியாரது முன்னுரையுடன் ஆரம்பமாகும் -75

0 0 0

(வேலணை)

கொட்டுகு சமாசமூதியமுத்தினராக மாதாந்தம் நடாத்தப்படுகிறது அறிவிப்புக் கூட்டத்தாரதின் 6வது கருத்தரங்கு, இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30 மணிக்கு வாழ். கொக்குவில் வீதியில் உள்ள கொக்குவு வாதர் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் கொக்குவு சமாசமூக நிலையத் தலைவர் நிரு. செல்லவடிவேல் தலைமையில் நடைபெறவிருக்கிறது -75

வீர வணக்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட ஆகாய, கடல்வெளித் தாக்குதலில் வீரச்சாவடைந்த கேணல் கிட்டு மூவரும் ஆண்டு நினைவு நாள் வீர வணக்கக் கூட்டம் இன்று நடைபெறும்.

கொழுமாமதிக் உள்ள ஆ. உ வெ. மரவீரர் நினைவாலயத்தில் இன்று மாலை 5-00 மணிக்கு இக்கூட்டம் நடைபெறும்.

சளரம் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

"சளரம்" இணையோரும் ஆன திங்கள் இதழ் மூன்றாம் ஆண்டு நிறைவுச் சிறப்பிதழ் பல விடயங்களுடன் வெளிவந்துள்ளது.

சகலரை ஒவ்வொரும் சாவாத்திருவே! வாழி! என்னும் கவிஞர் புதுவையிரத்தினதுரையின் வாழ்த்துக்கவிதையுடன் உள்ளே தமிழன் வரவு, கரும்புலிகள் சரணாகதம், சுதந்திரத்தின் பின் நாடாளுமன்றத் தேர்தல் ஐ. தே. க. தேர்தல் அறிக்கை, கிராம வளமும் அபிவிருத்தியும், ரூவாண்டாவில் இனப்படுகொலை" நேரடிதிப்பு மற்றிய அறிமுகம் ஈழத்து இலக்கியம் மீதான எதிர்வரவுகளும் இயல்கள் வேண்டிய எழுதுவோர்களும், விருது, ஒரு மரமணி விடு அருச்சுனட்டும், கலைவிழி, நிலப்பயன்பாடு, வரிகளை வெற்றி கொள்வோம், கதைகளுக்கு வாழ மறுக்கிறார் ரூசோ, பறந்தன பறந்த கற்பனையும் அதன் செயல் வடிவமும், பேச்சுக்கரகால் வொருவாரம், விஞ்ஞானம், சுவாதரம் மற்றும் பல அறிவுரை கவிதைகளும், சிறுகதைகளும், கவிதைகளும், துணுக்குகளுடன் சளரம் மூன்றாம் ஆண்டு இதழ் வெளிவந்துள்ளது.

அழகான அமைப்பமைந்த தடன் வெளிவந்துள்ளதுடன் இவ்விதழில் நல்லூர் திரு. பிரபாகரன் வெளிச்சத்திற்கு வழங்கிய பேட்டியும் இணைக்கப்பட்டுள்ளது. -4

தேர்தல் கடமையில் 1,40,000 உத்தியோகத்தர்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் கடமையாற்றுவதற்கு ஒரு லக்சத்து 40 ஆயிரம் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுவார்கள்.

இவர்களில் ஒரு லக்சம் அரசாங்க ஊழியர்களும், 40 ஆயிரம் பேர் வாதுரைப் புலி படையை சேர்ந்தவர்களாவர்.

இம்முறை இடம்பெயர்ந்த வர்களில் வெவ்வேறு மாவட்டங்களில் இருந்த சொந்த மாவட்டங்களுக்கு 10 ஆயிரம் பேர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. -ம-தி

நாடுகடந்த விரிவதற்கு சந்திரிகா முயல்கிறார்

(கொழும்பு)

பொதுசன ஜனாதிபதி முன்னாள் நிதி அமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க நாடுகடந்த பிரிவதற்கு முயல்வதாக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தெரிவித்துள்ளார்.

மொறட்டுவையில் அண்மையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: நிறைசேர் நிதியிலிருந்து செலவழிக்கப்படும் ஒவ்வொரு சதமும் நாடுகடந்த அபிவிருத்திக்கே பயன்படுத்தப்படும் என்றும், 1988-89ம் ஆண்டுக்கான பதுளையில் நாடுகடந்த நிலையில் வருமுறையை ஒடுக்குவதில் காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசா ஆற்றிய பணியையும் நினைவு கூர்ந்தார். ஏ-தி

சகல தபால் நிலையங்களுக்கும் தொலைபேசி வசதிகள்

(கொழும்பு)

நாடுமுழுவதிலுமுள்ள தபால் நிலையங்களுக்கு உபதபால் நிலையங்களுக்கு தொலைத் தொடர்பு வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நாடுமுழுவதில் 534 தபால் நிலையங்களும் மூவாயிரத்துக்கும் அதிகமான உபதபால் நிலையங்களும் உள்ளன.

ஏறக்குறைய எல்லா தபால் நிலையங்களுக்கும், கடந்த 2000 உபதபால் நிலையங்களுக்கும் தொலைத் தொடர்பு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளன.

புதிய தொலைத்தொடர்பு நிலையங்கள் அமைக்கப்படுவதால் பிரதேசங்களுக்கு தொலைத்தொடர்பு வசதியை வழங்கப்படுகிறது.

தனியார் அலைவரிசை கொண்ட வானொலி சாதனத்தை பயன்படுத்தி அந்த வசதியை ஏற்படுத்திக்கொடுக்கப்படுகிறது.

இந்த ஆண்டு முதல் ஆறாவது காலாண்டுக்காலத்தில் 55 உபதபால் நிலையங்களுக்கு தொலைத்தொடர்பு வசதியை ஏற்படுத்திக் கொடுக்க 60 லக்சம் ரூபா ஒதுக்கப்பட்டது என தொலைபேசி பிரிவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ)

உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ண - வ. சேந்தி நொச்சி மகா பதி ஸ்ரீபத்திரகாளி அம்மன் கோவில் வருடாந்த கலைவார உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளது: (வே)

வில்லூன்றி புனித தீர்த்தம்

ஆடி அமாவாசை

1. வில்லூன்றி புனித தீர்த்த அடித்தளத்தை மட்டப்படுத்தலின் இறுதிக்கட்ட வேலைகளும் துப்பரவுசெய்தலும் 4-8-1994 முதல் 6-8-1994 வரை நடைபெறவிருப்பதால் கேணிப்பாலனை இத் நாட்களில் நிறுத்தப்பட்டிருக்கும். அந்தியேட்டி மடங்களில் அந்தியேட்டி செய்வதற்கு எதுவித தடையுமிராது.

2. ஆடி அமாவாசை தினமான 7 8 1994 ஞாயிற்றுக்கிழமை காலை 7மணிக்கு வில்லூன்றி விநாயகப்பெருமான் புனிததீர்த்தத்தில்தீர்த்தமாரிகொண்டருளுவார். அதனைத் தொடர்ந்து தீர்த்தத்தில் தீர்த்தமாட பொதுமக்கள் அனுமதிக்கப்படுவர்.

3. ஆடி அமாவாசையன்று காலை 6 மணி முதல் மத்தியானம் 1 மணி வரை பிதிர்த்தர்ப்பணங்கள் செய்துகொள்ள விரிவான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. வில்லூன்றி விநாயகர் தேவஸ்தான குருமார்கள் பிதிர்த்தர்ப்பணத்தை செய்துவைக்கும் குருவாக கடமையாற்றுவர். அத்தடன் வில்லூன்றி அந்தியேட்டி மடங்களில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளில் குருமாரான சேவையாற்றுபவர்களிருப்பின் அவர்களும் பிதிர்த்தர்பணம் செய்துவைக்கும் குருவாக கடமையாற்ற அனுமதிக்கப்படுவர்; இவர்கள் தங்கள் விண்ணப்பங்களை எழுதி தீர்த்தக்கேணி மணிவனையிடம் 4 - 8 - 1994க்கு முன் நேரடியாக வைத்திருக்குமாறு வேண்டப்படுகின்றனர். விண்ணப்பித்து அனுமதி பெறாத எவரும் பிதிர்த்தர்பண குருவாகக் கடமையாற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

பரிபாலன சபை

வில்லூன்றி புனித தீர்த்தம்
31-07-1994 (இ-1162)

மணிவாக்கு

பகுத்தறிவே மனிதனுடைய உயர்வுக்குக் காரணம். ஆனால் அது எதிர்பார்க்கிற வகையினின்றுங் வில்லாமையே உத்தமம்.

— ஆர்பர்

நமது நோக்கு

வெலி ஓயாவில்!

"நாகலுடைய பிரிக்க விடமாட்டேன்! நிலப் பயன்பாடு, சமூகம் ஒழுங்கு நிலைநாட்டப் போன்றவை மத்திய அரசிடமே இருக்கும்!" என ஜனாதிபதி பதிலுரை ஆற்றும் பௌத்த சங்கங்களுக்குக் எழுதிய வாக்குறுதியில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியன் பாணியிலான அதிகாரப் பகிர்வு செய்யப்படும் என நாடாளுமன்றத் தெரிவுக்குழு தீர்மானித்துள்ளது. இப்படியாக நாடு உதவி எழுகிற நாடுகளுக்கும் ஏனைய உலக நாடுகளுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் - இந்தியாவில் மொழிவாரி மாகாணங்கள் உருவாக்கப்படுதும், நிலப் பகிர்வு மாகாண அரசுகளுக்கு ஒதுக்கப்படுகிற அதிகாரம் எப்படி இருக்கிறது என்பதையும் இலங்கை அறியாமலா இருக்கிறார்கள்?

இன்று - நிலப் பகிர்வு மத்திய அரசிடம் இருக்க வேண்டும் என்பதன் காரணம் என்ன?

"பொதுத்தேவை" என்ற பெயரில் சிறுபான்மை மக்களின் நிலங்களை அபகரிப்பதும், பின்னர் பெரும்பான்மை இனத்தவர்களைக் குடியேற்றுவதும் பழங்கதை மாத்திரமல்ல,

அது தொடர்கதை என்பது அண்மையில் "சண்டே லீடர்" பத்திரிகையுடன் கூடிய கட்டுரை ஒன்றின்மூலம் தெளிவாகிறது.

மணலாறு, வெலிஓயா வாகி, வேராவில் கரிக்கு அச்சுறுத்தலுக்கும் பிரிவு கூட, இராணுவத்தின் பெருமளவு வளங்கள் பயன்படுத்தித் திட்டமிட்ட குடியேற்றம் தொடருகிறது.

இவ்வாண்டு - மேலும் 500 குடும்பங்கள் வாணிக, மாவலி L வலயம் என்ற பெயரில் வழங்கப் படவுள்ளன.

முல்லை மாவட்டத்தில் இருந்த ஒரு பகுதி வவுனியா மாவட்டத்தில் இணைக்கப் பட்டிருக்கிறது. இம்முறை அந்த நோக்கில் வாக்களிக்கவும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன.

இராணுவத்தின் பிடிக்குள், அரச குடியேற்றங்களை உருவாக்கி வைத்திருப்பதும், இனரீதியாகத் தேர்தல் ஆதரவு நடைபெறும் என அறிவிப்பதன் அரசின் நோக்கு எந்தளவுக்கு எப்பதை தெளிவாக்குகிறது.

திட்டமிட்ட குடியேற்றங்கள் வடகிழக்கைப் பிரித்துவிடுவதில் அரசாங்கம் அக்கறையும் அவசரமும் எந்தளவுக்கு என்பதை விளக்கிக் கொள்வது அவசியமாகிறது;

தேர்தல் வன்செயலை கவனிக்க விசேட பொலிஸ் பிரிவு

(தொழுதி)

தேர்தல் வன்செயல்களை ஆராய்வதற்காக பொலிஸ் தலைமையகத்தில் விசேட பிரிவொன்று அமைக்கப்படுகிறது.

இந்தப் பிரிவு, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் லெனி குணரத்னவின் தலைமையில் செயற்படும்.

பிரதேச மட்டத்தில் அமைக்கப்படுகின்ற தேர்தல் வன்செயல்கள் சம்பந்தமான பிரிவு கண்காணிப்பதையும், ஒழுங்கையும் மேற்கூறியவாறான இந்தப் பிரிவுடன் இணைக்கப் படும்.

வன்செயல் சம்பவங்கள் தொடர்பாக உடனுக்குடன் தொடர்பு கொள்ளக்கூடிய வகையில் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்துடன் இந்தப் பிரிவு தொடர்புகொண்டுள்ளது.

49 ஆயிரம் பொலிஸார் தேர்தல் கடமையிலும், மாதுகாப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தப்படுவர் என்று பிரதிப் பொலிஸ் மா அதிபர் இக்னேஷியஸ் கனகரட்ணம் தெரிவித்துள்ளார்.

67 ஆயிரத்துக்கு அதிகமான பொலிஸார் வாக்களிப்பு நிலையங்களிலும், வாக்குகள் எண்ணப்படும் நிலையங்களிலும் அதிகாரிகளுக்கு பாதுகாப்பு வழங்குவார்கள். மேலும் 12 ஆயிரம் பேர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

பொலிஸ் அதிகாரிகள் மாத்திரமே வாக்களிப்பு நிலையத்திலும், வாக்குகள் எண்ணும் நிலையத்திலும் ஆயுதங்களுடன் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

இந்த நிலையங்களில் ஆயுதம் தாங்கிய பொலிஸார் படையினர் ஈடுபடுவார்கள். -இ

இடம்பெயர்ந்தோருக்கு நிவாரண விநியோகம்

(மண்டதீவு)

மண்டதீவு பகுதியில் நேற்றுக் கூட்டுறவுச் சங்கம் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு வைகாசி மாத முதல் இரு வாரங்களுக்கான இலவச நிவாரணப் பொருட்களை இவ்வாரம் தொடக்கம் சங்கத்தில் கிளை ஊடாக விநியோகித்து வருகின்றது.

இம்முறை மூன்று அங்கத்தவர் கொண்ட குடும்பங்களுக்கு முதல் தடவையாக நிவாரணத்திற்கு "கூப்பிறே" பாவிக்க பக்கற்றும் வழங்கப்பட்டு வருகின்றது. -72

இந்திய—இலங்கை வர்த்தக உறவில் முன்னேற்றம்

(கொழும்பு)

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான வர்த்தக உறவுகள் கடந்த சில ஆண்டுகளின்போது பெருமளவு முன்னேற்றம் கண்டுள்ளன.

இந்தக் பிரதேசத்தில் வர்த்தக நடவடிக்கைகளை ஊக்குவிப்பதில் இந்தியாவும் இலங்கையும் முக்கியமான பங்கை வகித்துவிட்டன.

இந்திய உயர் ஸ்தானிகர் நரேஷ்வர் தயால் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை வர்த்தக சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நேற்று முக்கிய உரையாற்றியபோது அவர் மேலும் கூறியதாவது:

வர்த்தக சபை தனது கடமைகளுக்கும், வர்த்தக சமூகத்தவர்களுக்கும் பெரும் பணியாற்றுவது குறித்து நான் மகிழ்வடைகிறேன்.

—இ

புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-07-31 ஞாயிறு இரவு

8-01 - இசைவாரம் - நிகழ்ச்சி செல்வி சு. கோபிதாஸ் அவர்களின் வலின் கச்சேரி

8-30 - செய்திகள்

8-40 - தொடர் நாடகம் - இலக்கம் மன் 34ம் அங்கம்

1994 08-01 திங்கள் காலை

7-02 - காலை வணக்கம்.

7-15 - மணிவாரம்

7-30 - செய்திகள்

7-35 - பத்திரிகை செய்திகள்

7-40 - தமிழ்ப்பாடங்கள்

பலதும் பத்தும்

தேர்தற் செய்திகள்!

செய்தி (1): அரசியல் வாதிகள் அதிகம் இருமாதத் தாமும்செய்திகளைக் கிளறி இது பத்திரிகைகாரர்களின் "சரடு" எனத் தாங்கள் எண்ணினார்கள்.

கம்பஹா மாவட்டத்தில் நடிகர் மொன்சேனா மொதலை முன்னணி வேட்பாளர் என்ற செய்தியை ஒருவர் பேராசிரியர் சாலோ மொன்சேனாற்குக்காட்ட அவர் என்ன சொன்னார்?

"பத்திரிகைகளில் மேல் முக்கியம் அச்சிடப்பட்டிருக்கிறதை மாத்திரம் தான் நம்புகிறேன்!"

செய்தி (2) பிரதமர் ரணில் பிரபல அமெரிக்கப் பிரசாரகர் ஒருவரைத் தனது பிரசாரத்திற்குப் பொறுப்பாக்கியிருக்கிறாராம்; கிளிண்டன் பாணியில் பிரதமரின் வேட்பு வேட்டு கூடிய கவரேஜுடன் வெளியிடப்பட்டிருக்கின்றன, இனிஞர் வாக்குகளைக் வர.....!

—மயூரன்

இராசி பலன்

31-07-1994

ஞாயிற்றுக்கிழமை

(தமிழுக்கு ஆடி 15)

அமுதமி மு. ப. 8-10 வரை; பரணி மு. இ. 10-14 வரை, மரணயோகம், இரவுராகம், மாலை 4 33 முதல் 6-03 வரை; சுபநேரம் காலை 9-03 முதல் 10-33 வரை.

மேடம்: மனக்கிலேசம், இன்ன உறவு, பராக்கடு;

இடபம்: தப்பான எண்ணம், அலைச்சல், வேடிக்கை;

மிதுனம்: தெய்வ பிரார்த்தனை, பணவரவு, தியாகம்.

கடகம்: சமயோசித புத்தி, குடும்பக்கவலை, பணவரவு;

சிங்கம்: தொழில் மாற்றம், வீடு கட்டல், அலைச்சல்;

கன்னி: எதிர்பார்க்கலாம், தாராள தொல்லை, வேதனை.

துலாம்: வைராக்கியம், குடும்ப உறவு, நற்செய்தி.

விருச்சிகம்: வாக்குறுதியைக் காப்பாற்றல். மனநிறைவு, சாதகமித்த.

தனுசு: மனைவி வழி, மனச் சஞ்சலம், இனசனப்பகை.

மகரம்: ஆக்கபூர்வம், வேதனை தரும் சம்பவம், வேலைச்சுமை;

கும்பம்: வாக்கு பலிதம், உறவினர் உதவி, தெய்வீக சிந்தனை;

மீனம்: ஆடம்பர தொல்லை, தயக்கம், தொழில் நஷ்டம்.

ஜோஸ்யர்

தரிசு நிலமெங்கும் காடானால்
தரணியிலே வளம் சேரும்

கொடுப்பனவு

(அக்கரைப்)

வாழ். சிவிக்கேட் கடலை ஊழியர்களிடம் மே மாதக் கொடுப்பனவு நாளை முதல் மாதம் திகதி திங்கள்கிழமை காலை 9-00 மணி தொடக்கம் மாலை 3-00 மணி வரை வாழ். செயலகத்தில் வைத்து வழங்கப்படும். -59

ஊசிமருந்து தட்டுப்பாடு நீங்கியது

(தெல்லிப்)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் ஏற்பட்ட ஊசி மருந்துத் தட்டுப்பாடு நீங்கியுள்ளது.

அங்கிருந்து வாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தால் மேற்படி ஊசிமருந்து, விசாரணைக்கு ஊசிமருந்துகள் இன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. -160

கால எல்லை நீடிப்பு

(காரைநகர்)

மாவட்டத்திலுள்ள மக்கள் வங்கிகளில் ஆடைவு வைத்த நகைகளை மீளப் பெறுவதற்கான கால எல்லை எதிர்வரும் செப்டம்பர் மாதம் 30ந் திகதி வரை நீடிக்கப்படுகிறது.

-71

பயனற்ற நிலையில் அம்புலன்ஸ்

(அச்சுவேலி)

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை அம்புலன்ஸ் வண்டி பயன்படுத்தமுடியாத நிலையில் உள்ளது;

இதனால் அவசர நோயாளர்கள் வாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லமுடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக நோயாளர், பொதுமக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகி வருகிறார்கள். 74-இ

அச்சுவேலி ஆஸ்பத்திரி வேலிகள் அடைப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் எல்லை வேலிகள் பாதுகாப்பான முறையில் அடைக்கப்பட்டு வருகின்றன.

இதுவரை காலமும் திறந்த வெளியில் இருந்துவந்த அச்சுவேலி வைத்தியசாலை காணி அளவிடு செய்யப்பட்டு எல்லை வேலிகள் சீர்செய்யப்பட்டு வருகின்றன.

அரசினர் வைத்தியசாலை நற்நோக்கு அபிவிருத்திச் சங்கத்தின் முயற்சியால் இது விரைவாக நடைபெற்று வருகின்றது. 74-இ

தனியார் பாதுகாப்பு நிறுவனங்கள் பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்ய வேண்டும்

(கொழும்பு)

தனியார் பாதுகாப்பு நிறுவனங்கள் பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளது.

இந்தக் நிறுவனம் ஒன்று ஆரம்பத்த பதிவுக் கட்டணமாக 500 ரூபாவை செலுத்த வேண்டும். எனினும் இதுவரை நாடெங்கும் செயற்படும் 300 தனியார் பாதுகாப்பு நிறுவனங்களில் 50 நிறுவனங்கள் மாத்திரம் பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்திருக்கின்றன. —இ

சிறுவர்களுக்கு போஷாக்கு உணவு

(பண்டத்தரிப்பு)

சோண்பாய் பிரதேச செயலர் பிரிவில் பல்வேறு செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருபாலை ஆனந்தபுரம் கிராமத்தில் மக்கள் நலன்களைக்கருதி பிரிவின் அனுசரணையுடன் சிறுவர், சிறுமியருக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது.

வாரமொருதடவை கிராமத்தில் இலவசச் சேஞ்சிலுவைச் சங்கத்தின் சோண்பாய் பிரிவு கிளையின் ஆதரவில் சத்துணவு வழங்கும் திட்டமொன்றும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இதேவேளை சோண்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த குடும்பநல சேவையாளர்கள் இப்பிரிவில் பேர்கூடு வாரந்தோறும் போஷாக்கு பேரஷாக்கு குறைந்தவர்களுக்கு சத்து மிக்க குளிசைகளையும், பூச்சி நாடுப்பு மருந்துகளையும் வழங்கி வருகின்றனர்.

—72-இ

அரசாங்க சேவை

பரீட்சைகள் ஒத்திவைப்பு

(தொழும்பு)

அரசாங்க சேவையில் உள்ள பரீட்சைகள் நடாத்தப்பட்டு இருந்த தமிழ்மொழித்தாளர், கருமொழித்தாளர். எழுது மெய்ஞர் பரீட்சைகள் யாவும் எதிர்வரும் மாதம் 15ம் திகதியும் தமிழ்மொழித்தாளர் கருமொழித்தாளர் பரீட்சைகள் அடுத்த மாதம் 27ம் திகதியும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (வி-தி

அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சோமாஸ் கந்தரி ஸ்ரீ முத்தமாரி அம்மன் கோவில் அலங்கார உற்சவம் இன்று 31-ம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறவுள்ளது.

உற்சவ நாட்களில் திருஆறு. திருமுருகன் "விநாயகர் புராணம்" என்னும் பெருவிழா தெய்வீகப்பேருரை நிகழ்த்தவுள்ளார். (

மட்டு. அம்பாறையில் கட்சி மோதல்களினால் அம்பாவிகள் பாதிப்பு

(மட்டுநகர்)

மட்டு-அம்பாறை மாவட்டங்களில் தேர்தலுக்காக கிளைகளே இடம்பெறும் மோதல்களினால் அமைதியான தமிழர்களின் பெருந் பாதிப்பை அடைந்து வருகிறார்கள்.

ஒரு இடத்தில் கட்சி ஒன்று தனது அலுவலகத்தை அமைத்தபோது பிறிதொரு கட்சி உறுப்பினர் அதற்கு தாக்குதல் நடத்துவர். மூன்று அப்பகுதியில் வாழும் மக்கள் வாகமடைகின்றனர். (த-தி)

147 வயதில் வாழும் ஈரானிய மூதாட்டி

(டெல்லிவிவ்)

ஈரானில் உள்ள மிகவும் மூத்த பெண்மணி 147 வயதென அறிவிக்கப்படுகிறது.

1847ம் ஆண்டில் பிறந்த பேகிலூம் முமதி என்ற இந்தப் பெண் ஐந்து பரம்பரையைக் கண்டுள்ளார். முமதி கடந்த ஈரானிய பேரிடர் பிரதேசத்தில் வசிக்கிறார். உயிருடன் இருக்கும் அவரது மூத்த புதல்விக்கு வயது 100 ஆகும். இவருக்கு பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் 277 பேர் இருக்கிறார்கள்.

ஈரான் தேசத்தை ஆறு அரசர்கள் ஆட்சிசெய்த காலங்களில் வாழ்ந்தவர் இவர். 6 ஆண்டுகளுக்குமுன் இவருக்கு புதிதாக பல் ஒன்று முளைத்தது. எனினும் இவ் வயதிற்கு பின் இந்தப் பல் விழுந்து விடுமென எனவும் தெரிவிக்கப்படுகிறது. ம—தி

இராணுவ அதிகாரி பூநகரியில் பலி

(யாழ்ப்பாணம்)

பூநகரி-மட்டுவில் நாடு பகுதியில் விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற மோதலில் சிறிலங்கா இராணுவ அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டார். இராணுவத் தரப்பில் ஒருவர் காயமடைந்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இச்சம்பவம் இடம்பெற்ற தாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை கடந்த சில தினங்களாக கிழக்கில் மட்டு மீனருக்குள் புலிகளுக்குமிடையில் பல பகுதிகளிலும் மோதல்கள் இடம்பெற்றவாறு தாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-தி)

ம. என்னெ[illegible] விநியோகம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல தே[illegible] கூட்டுறவுச் சங்கம் மக்[illegible] அடிப்படையில் தலா 4 லீற்றர் வீதம் லீற்றர் 25 ரூபாவுக்கு சங்க கிளைகள் ஊடாக மண் எண்ணெய் விநியோகம் செய்து வருகிறது. -7

வெங்கட்ராமன் நூல் விவகாரம்

எதிர்ப்பு தெரிவித்த இரு நூறு பேர் கைது

(சென்னை)

முன்னாள் இந்திய ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன் எழுதிய வெளியிட்ட ஒரு புத்தகத்தில் ராஜிவ் காந்தி பற்றி தெரிவித்த இருக்கும் சில கருத்துக்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நேற்று சென்னையில் அவரது இல்லத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடாத்த முயன்றதாக இந்திய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நூறு பேர் கைதுசெய்யப்பட்டனர்.

இதேவேளை சோயம்புத்தூரில் இதே பிரச்சினை குறித்து எதிர்ப்பு தெரிவிப்பதற்காக திரு. வெங்கட்ராமனின் உருவப் பொம்மையை எரிக்க முயன்ற இ. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மேலும் நூறு பேர் கைது செய்யப்பட்டனர். த-தி

16 பொலிஸ் அதிகாரிகள் பலி

(புதுதில்லி)

இந்திய மத்திய பிரதேசப் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற நிலக்கண்ணி வெடிதாக்குதலில் 16 பொலிஸ் அதிகாரிகள் பலியானார்கள். நக்சலைட்டுகள் இந்தக் கண்ணிவெடித் தாக்குதலை நடத்தியதாக கூறப்படுகிறது. (த-தி)

'வெளிச்சம்' வெளிவருகின்றது

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் கண், மண் பாதுகாப்பதற்கு மாதாந்த வெளியீடான 'வெளிச்சம்' கண், இலக்கிய சமூக இதழ் (ஆடிமாத இதழ்) நாளை திங்கட்கிழமை வெளிவருகின்றது.

இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் வழங்கிய வரலாற்றையும் மாவீரர்களின் முன்னாள் கவிதையும் ஆதிலக்ஷ்மி [illegible], சோ. [illegible], கிருஷ்ணராஜா, [illegible], இளையவன் ஆகியோரின் கட்டுரைகளும் தமிழர் கலையின் உணர்வுச் சித்திரமொன்றுக் 'வாழ்வோடுணைந்த கலை, — வன்னியில் நடந்த தொருக் கதை' மற்றும் கவிதையின் மறுபிரசுரமும் உள்ளன. (வி

மட்டக்களப்பில் மீன்கள் வாடுகின்றன மக்கள் அழுகின்றனர்

(கொழும்பு)

மக்கள்வைப்பு வாரியின் தினமும் மீன்கள் வாடுகின்றன. ஆனால் மக்கள்வைப்பு வாழ் தமிழ் மக்களோ தினமும் தமது வாழ்க்கையை நினைத்து அழுதவண்ணமே உள்ளனர்.

இவ்வாறு "[illegible]" வாரஏடு தனது விமர்சனத்தில் தெரிவித்தது. அவ் விமர்சனத்தில் மேலும் குறிப்பிடுகையில்:

மாடு மாவிடத்தில் 15 வருடத்திற்கு மேற்பட்ட [illegible] பொருளாக இராணுவத்தின் கெடுபிடியை எதிர்நோக்க வேண்டியுள்ளது; விதிக்குவிதி மோடப்பட்டிருக்கும் பலவினால் சோறுக்கு சாவுக்கு மக்கள் பெரும் சோதனைகளுக்குள்ளாகின்றன.

விரச மடைதல் கூறுவது போல் மக்கள்வைப்பு மாவட்டம் முழுவதும் பலவினால் கட்டுப்பட்டுள் இருக்கிறது. மற்றபோதும் பல பகுதிகள் புலிகள் வசமே உள்ளது. இம்முறை நடைபெறவிருக்கும் தேர்தலுக்காக மக்கள் பல துன்பங்களை எதிர்நோக்க வேண்டிய நிலையில் உள்ளனர் எனவும் தெரிவித்தது. (வி

குண்டு வெடிப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

[illegible] இரு பொது மக்களும் தேர்தல் பிரசாரத்திற்காக வவுனியாவிற்கு வந்த வர்களெனத் தெரிவிக்கப்படுகிறது. இக்குண்டு வெடிப்பை படுத்து வவுனியா நகரெங்கும் பெரும் தேடுதல் வேட்டையை மேற்கொண்டதுடன் தமது [illegible]யையும் பலப்படுத்தியுள்ளனர். வி

பொ. ச. மு.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தம் ஒட ஒன்றரை மணித்தியாலத்தினில் ஒரு இடத்தில் கிடந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கொலையில் [illegible] பயன்படுத்தப்பட்டவை வேறு செய்முறை எந்த உதிரவுவும் வரவில்லை என்று அனுராதபுரம் பொலிசார் தெரிவித்தனர்.

தெற்கில் இடம்பெற்ற தேர்தல் வன்முறையினால் இதுவரை 10 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் எல்லாளன் பொதுச்சன ஜனநாயக முன்னணி ஆதரவாளர்களாவர். தேர்தல் வன்முறைகளில் நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது; ம

இதேவேளை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

[illegible] மோதலில் ஈடுபட்டு வருகிறார்கள். பாதுகாப்பு மற்றும் வேறு நிலை காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக

இம்முறை தேர்தலில் பொதுசன ஐக்கிய முன்னணியே வெற்றிவாய்ப்பு காணப்படுவதாக ஐ. தே. கவின் [illegible] தேர்தலில் தமிழருக்கெதிராக தாக்குதல் நடாத்தக் கூடுமென்ற அச்சநிலை காணப்படுகிறதாக. வி

ஆப்கான்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

20 ஆண்டுகளுக்கு மேல் துண்டிக்கப்பட்ட இவரது சடலம் காபூலில் புறநகர் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது. பிரதமர் ஹெக்மதியாரின் கலிபில் கண்டுபிடிக்கப்பட்டு உள்ள இடத்தில் இவரை கொலைசெய்தது யார் என்பது தெரியவில்லை.

இந்தக் கொலையை பி. பி. ஸி வடுக் கண்டனம் தெரிவித்துள்ளது. [வி

சந்திரிகாவை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

[illegible] வெளிவருவது போலும் இந்தப் பிரசுரங்கள் அச்சிடப்பட்டுள்ளதென்றும் 6 லட்சம் பிரதிகள் அச்சடிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நிர்வாணமான பெண் ஒருவரின் படத்தில் சந்திரிகாவின் தலை பொருத்தப்பட்டு எடுக்கப்பட்ட படம் குறிப்பிட்ட ஏடுகளே சந்திரிகா பொலிசாரிடம் புகார் செய்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-தி)

அரச அதிகாரிகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகள் ஐ. தே. க.வின் வெற்றிக்காக பல நடவடிக்கைகளில் வெளிப்படையாகவே ஈடுபட்டு வருகிறார்கள். இதற்கு அவர்கள் அரச வாகனங்களையும் பயன்படுத்தி வருகிறார்கள்.

இந்த அதிகாரிகளை கடுமையாக எச்சரித்துள்ள திரு. பீரிஸ் இந்த நடவடிக்கைகளுக்காக அரச அதிகாரிகள் பாரதூரமான விளைவுகளை எதிர்நோக்க வேண்டி வருமெனவும் கூறியுள்ளார்.

பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வரும் பட்சத்தில் ஊழல், லஞ்சம், மற்றும் மோசடிகளில் ஈடுபடும் அமைச்சர்கள் உடபட அதிகாரிகளும் சட்ட நடவடிக்கைகளை எதிர்நோக்க வேண்டி வருமென பொதுசன முன்னணியினர் கூறியுள்ளதும் தெரிந்ததே. (ம-தி

மாகாணத்தில் "[illegible]" விநியோகம் [illegible]

[illegible] 31-8 [illegible] 1994 [illegible]

Registered as a News paper at the General Post Office Sri Lanka under License Number D/15556/N

மக்திப்பாடல்கள் நாடகவெளியீடு

(அரியாலை)

[illegible] கந்தசாமி ஆலய [illegible] 3ம் திகதி புதன்கிழமை [illegible] 6 மணிக்கு [illegible] திருஞான [illegible] 59

[illegible]லிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

[illegible] நிலை [illegible] மடைந்துவருவதாக தெரிவிக்கப்படுகிறது. இதைவடுத்தே முக்கிய நகரங்கள் [illegible] இராணுவத்தினர் [illegible]வருகின்றனர்.

பொலிசார் [illegible] பாதுகாப்பு [illegible] உதவியாக [illegible] படையினர் உதவி பெற [illegible] வருகிறார்கள் [illegible] தெரிவித்துள்ளது. வி

77 கலவரம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

[illegible] பொலிஸ் நிலை[illegible] அதிகாரி சேவையில் இருந்து [illegible] இடை நிறுத்தப்பட்டுள்ளார்.

13 பேரின் கொலைகளுடன் சம்பந்தப்பட்ட ஒருவர் [illegible] செய்யப்பட்டுள்ளார்.

அனுராதபுரத்தில் [illegible] ஒருவ[illegible] நேரடியாக தாக்குதல் [illegible] ஈடுபட்டுள்ளார்.

இவையெல்லாம் [illegible] தேர்தலுக்குப் [illegible] 77ம் ஆண்டு [illegible] ஒன்று ஏற்படலாம் [illegible] இடமிருக்கிறது [illegible]. [ம-தி

கல்வித்துறையின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

[illegible]றது. [illegible] நூற்றாண்டு காலமாக [illegible] பணிபுரிந்து எத[illegible] [illegible] இந்தக் [illegible] [illegible] [illegible]டுத்துள்ளது.

தமிழீழக் [illegible] தூண்களாக நிர்வாக [illegible]. இந்தக் [illegible] ஆதார [illegible] இனச்சமூகத்தின் [illegible] [illegible]கிறது; [illegible] வளர்ச்சிபெற்று [illegible] [illegible] மேம்பாடு காணும் [illegible]னர்.

யாழ்ப்பாணக் [illegible] [illegible] தனது [illegible] [illegible] தமிழீழ [illegible] உயர்[illegible] [illegible] வாழ்த்துகி[illegible] வி